IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 70/2020

Deposition of witness for prosecution : PW5

Defense :

Name : திரு.லோகேஷ்

Father's Name : ராஜா

Village : கிராம நிர்வாக அலுவலர்

Taluk : பையூர்

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2023

முதல் விசாரணை

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி இறப்பு.**

1. நான் தற்போது பையூர் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன். நான் 2017ம் ஆண்டு ஆரணி நகர மேற்கு கிராம நிர்வாக அலுவலகராக பணி புரிந்து வந்தேன்.

2. 13.06.2017 அன்று நானும், என் உதவியாளர் பாஸ்கர் என்பவரும் மதியம் 12.30 மணிக்கு அலுவலக பணி சம்மந்தமாக காமராஜர் சிலை அருகே சென்றோம். அந்த சமயத்தில் போலிசார் ஹேமநாதன் என்பவரை விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹேமநாதன் மணிகண்டனை தாக்கியது சம்மந்தமாக குற்றத்தை ஒப்புக் கொண்டு தாமாக முன் வந்துஒப்புதல் வாக்குமூலம் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தார். காவல் ஆய்வாளர் ஹேமநாதனிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், என் உதவியாளர் பாஸ்கரன் சாட்சி கையெழுத்து செய்தோம் என்னிடம் காட்டப்படும் ஹேமநாதனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சிக கையெழுத்து என்னுடையது தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் போலிசார் ஹேமநாதனை ஆரணி ஆற்றங்கரைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு ஹேமநாதன் தான் பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தினார். அந்த கத்தியை காவல் ஆய்வாளர் மகசர் தயார் செய்து அதன் முன்னிலைக்கு கத்தியை

கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கத்தி தான் ஹேமநாதன் அன்று ஆய்வாளரிடம் எடுத்து ஆஜர்படுத்திய கத்தி ஆகும். அந்த கத்தி **சா.பொ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடைது தான் என்னுடன் என் உதவியாளர் பாஸ்கரன் சாட்சி கையெபத்து செய்தார் கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் 2016 முதல் 2017 வரை ஆரணி நகர மேற்கு கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். 13.06.2017 அன்று நான் என்ன காரணத்திற்காக காமராஜர் சிலை அருகே சென்றேன் என்றால் முதியோர் ஓய்வூதியம் சம்மந்தமான விசாரணைக்காக சென்று இருந்தேன்.

2. நான் புத்திரகாமேஷ்வரர் கோவில் அருகே விசாரணைக்காக சென்று இருந்தேன். ஒப்புதல் வாக்குமூலம் காமராஜர் சிலை அருகே பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் எங்கு கையெழுத்து போட்டேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன்.

3. சா.பொ.1 கத்தியின் நீள அகலம் பற்றி எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்வதற்கு முன்பு ஆவணங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். என்னுடன் தான் என்னுடைய உதவியாளரும் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான்.

4. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு அங்கு தான் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். நான் அரசு ஊழியர் என்பதால் பொதுவாக காவல் துறையினர் ஏதேனும் உதவி கேட்டால் நான் செய்துக் கொடுப்பேன் என்றும் அதுபோல் எனக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் காவல் நிலையத்தில் கேட்பேன் என்று சொன்னால் சரிதான். அந்த வகையில் தான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் காவல் நிலையத்திற்கு சென்று வழக்கு சம்மந்தமான கையெழுத்துக்களை செய்தேன் என்றால் சரிதான்.

5. நான் சொல்வது போல் எதுவும் நடக்கவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை- இல்லை.